கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

நான்காம் வருட/இரண்டாம் அரையாண்டு சிறப்புக் கலைமாணித் தேர்வு – 2011/2012 (செப்ரம்பர் 2014)

# ECOS 4202 Current issues in World Economy

நேரம் : 03 மணித்தியாலங்கள்

எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

---

01.(a) விவசாயத் துறையைச் சார்ந்திருப்பதும், முதனிலைப் பொருள் ஏற்றுமதியில் தங்கியிருப்பதுமான நிலைமை விருத்தியடைந்த, அடைந்துவரும் நாடுகளினிடையே எவ்வாறு சார்பு ரீதியில் வேறுபட்டு நிற்கின்றன? ஆதாரங்களுடன் விளக்குக.

(12 புள்ளிகள்)

(b) இவ்வாறான நிலையில் இருந்து விடுபட குறைவிருத்தி நாடுகள் எவ்வாறான பொருளாதார சீர்திருத்தங்களை மேற்கொண்டு வருகின்றன?

(08 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

02.(a) காலநிலை மாற்றம் என்பதை எவ்வாறு விளக்குவீர்?

(04 புள்ளிகள்)

(b) அது எவ்வாறு விருத்தியடைந்த மற்றும் விருத்தியடைந்து வரும் நாடுகளின் பொருளாதாரங்களைப் பாதிக்கின்றது?

(08 புள்ளிகள்)

(c) காலநிலை மாற்றத்தினால் மாற்றம் பெற்றுவிட்ட சுற்றுச்சூழல் நிலைமைகளுக்கேற்ப இயைபாக்கத்தினை ஏற்படுத்தும் கொள்கைத் தெரிவுகள் சிலவற்றைக் குறிப்பிடுக. அத்தகைய இயைபாக்கம் பெறும் ஆற்றலை நாடுகள் எவ்வாறு அதிகரித்துக்கொள்ளலாம்?

(08 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

03.(a) ஒரு நாட்டின் பொருளாதார வீழ்ச்சிப் போக்கினை எவ்வாறு இனங்காண்பீர்?

(04 புள்ளிகள்)

(b) இன்றைய சீனாவின் வேகமான பொருளாதார வளர்ச்சியை எவ்வாறு விளக்குவீர்? புள்ளிவிபர ஆதாரங்கள் தருக.

(08 புள்ளிகள்)

(c) இத்தகைய வளர்ச்சியானது ஏனைய நாடுகளின் வளர்ச்சியைப் பாதிக்குமா? விளக்குக.

(08 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

04.(a) ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சி, அபிவிருத்தி என்பவற்றில் கல்வி, சுகாதாரம் என்பவற்றின் முக்கியத்துவம் எவ்வாறு காணப்படுகிறது?

(04 புள்ளிகள்)

(b) ஒரு பொருளாதாரத்தில் கல்வி, சுகாதாரம் என்பவற்றின்மீது மேற்கொள்ளப்படும் முதலீடுகளுக்கிடையேயான இணைப்பு நிலைமைகளை (linkages) எவ்வாறு விளக்குவீர்?

(08 புள்ளிகள்)

(c) "குறைவிருத்தி நாடுகளின் உண்மையான பிரச்சினையானது சனத்தொகை வளர்ச்சி அல்ல; அங்கு காணப்படும் ஒரு சில அடிப்படைக் குறைபாடுகளேயாகும்." விளக்கி விமர்சிக்குக.

(08 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

05. பின்வருவனவற்றிற்குச் சிறுகுறிப்பு எழுதுக.

(a) குறைவிருத்தி நாடுகளின் குறைந்த உற்பத்தித்திறன்

(b) பொருளாதார மற்றும் அரசியல் பலம் என்பவற்றின் சமத்துவமற்ற பங்கீடு

(c) காபன் வரித்திட்டமும் அதன் வினைத்திறனும்

(d) ஒரு நாட்டின் பொருளாதார வீழ்ச்சிக்கான பொதுவான காரணங்கள்

(20 புள்ளிகள்)

*****